පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

**ஆண்டிறுதிப் பரீட்சை – 2019**

| தரம் |
| --- |
| 10 |

மாணவர் பெயர்/சுட்டெண் :…………………………………………..
பாடசாலையின் பெயர் :……………………………………………… நேரம் : 2மணித்தியாலம்

தமிழ் மொழியும் இலக்கியமும்

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- தடித்த எழுத்தில் அமைந்துள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01 ‘‘சுற்றத்தார் தேவரொடுந்தொழ நின்ற”இங்கு **சுற்றத்தார்** என்பது
1.நண்பர்கள் 2.உறவினர்கள் 3.அரசர்கள் 4.தலைவர்கள்

02 ‘‘நாவலரின் கம்பீரமான தோற்றம் வீறு கொண்ட பார்வை”இங்கு **வீறு** என்பது
1.சோர்வு 2.மோகம் 3.வீரம் 4.தயக்கம்

03 கொடைவள்ளலாகிய சீதக்காதி அருளாளன்.இங்கு **அருள்** என்பதன் எதிர்ப்பதம்
1.இருள் 2.வரம் 3.கருணை 4.மருள்

04 ‘‘தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்”**வானுலகு** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1.பாதாள உலகு 2.மண்ணுலகு 3.விண்ணுலகு 4.சுவர்க்கம்

05 **தாதன்** என்பதன் எதிர்ப்பாற்சொல்
1.தாதி 2.தாதை 3.தாதிச்சி 4.தாயை

- பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06 பேணிப் பாதுகாத்துத் தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்.
1.ஓலக்கம் 2.ஒப்புரவு 3.ஓம்படை 4.ஒப்பாரி

07 தரம் ஐந்து மாணவர்களின் பரீட்சைக்கான Evaluation (எவலுவேசன்) நடைபெற்றது. இங்கு எவலுவேசன் எனும் சொல் குறிப்பது
1.கணிப்பீடு 2.பரீட்சை 3.கல்வியாண்டு 4.மதிப்பீடு

08 ஆபரணம்,பாத்திரம்,கப்பல் என்பன குறிக்கும் ஒரு சொல்
1.கலம் 2.மஞ்சு 3.களம் 4.நகை

09 சிங்கத்திற்குக் குருளை போல அணிலுக்கு

Education NCP - www.edncp.lk

1.குட்டி 2.குஞ்சு 3.பறள் 4.அலவன்

10 பின்வருவனவற்றுள் சிங்கள மொழிச் சொல்லாய் அமைவது
1.ஆஸ்பத்திரி 2.அன்னாசி 3.பில்லி 4.நேவி

11 நோய்க்கான சிகிச்சையை காலம் தாழ்த்தியதால் கமலன் இறக்க நேரிட்டது. காலம் தாழ்த்துதல் என்பதன் மரபுத்தொடர்
1.பழுக்கப் போடுதல் 2.தலையிடுதல் 3.பழுத்தல் 4.தலைகாட்டுதல்

12 நாம் உறவினர்களுடன் கோபதாபம் இன்றி வாழ வேண்டும்.இதில் ‘‘கோபதாபம்’’என்பது
1.அருஞ்சொற்றொடர் 2.அடுக்குத்தொடர் 3.இணைமொழி 4.இரட்டைமொழி

13 ‘‘குறு குறு நடந்து சிறு கை நீட்டி’’ என்பதில் குறு குறு குறிப்பது
1.இணைமொழி 2.இரட்டைக்கிளவி 3.அடுக்குத்தொடர் 4.அடுக்கிடுக்குத் தொடர்

14 ராஜன் தன் பிள்ளைகளுக்காக ஊணுறக்கமின்றி உழைத்தான்.இதில் ஊண் என்பது
1.இறைச்சி 2.நித்திரை 3.அயராது 4.உணவு

15 ‘‘அற்ப ஆசை கோடி தரித்திரம்’’ எனும் பழமொழி தரும் கருத்து
1.தகாத ஆசை 2.காலம் தாழ்த்திய ஆசை 3.பகட்டாசை 4.மெல்லாசை

16 சென்ற காலம் திரும்பாது எனும் கருத்தை உணர்த்தும் பழமொழி
1.காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
2.ஆற்றிலே கரைத்த புளி.
3.அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
4.இக்கரைக்கு அக்கரை பச்சை.

17 மீளா அழிவு என்ற கருத்தைத் தரும் உவமைத் தொடர்
1.அறுகயிற்று ஊஞ்சல் போல 2.ஆனைவாய்க் கரும்பு போல
3.உருத்திராட்சைப் பூனை போல 4.கரடி பிறை கண்டது போல

18 தாய் முகம் கண்ட சேய் போல எனும் உவமைத் தொடருக்குச் சமனான மற்றுமொரு தொடர்.
1.சூரியனைக் கண்ட பனி போல
2.அத்திபூத்தாற் போல
3.சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல
4.சூரியனைக் கண்ட தாமரை போல

19 காடுகளை வெட்டி கழனியாக்கினர்.இங்கு காடு எவ்வகை நிலத்திற்குரியது.
1.குறிஞ்சி 2.மருதம் 3.பாலை 4.முல்லை

20 பத்தை என்பது எப்பிரதேச வழக்குச் சொல்லாகும்.
1.கிழக்கு 2.தென்னிலங்கை 3.மலையகம் 4.மேற்கு

- பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21 குருவிகள் கூட்டுக்குத் திரும்பி வந்தது.என்பது எவ்வகை வழுவாகும்.

Education NCP - www.edncp.lk

1.பால் வழு 2.திணை வழு 3.எண் வழு 4.கால வழு

22 இனி,மற்றும்,பிற முதலியன.
1.வினைப் பகாப்பதங்கள் 2.இடைப்பகாப்பதங்கள்
3.உரிப் பகாப்பதங்கள் 4.பெயர்ப் பகாப்பதங்கள்

23 வாய்மையில் சிறந்தவன் அரிச்சந்திரன் இது உணர்த்தும் வேற்றுமைப் பொருள்
1.ஏதுப் பொருள் 2.எல்லைப் பொருள் 3.ஒப்புப் பொருள் 4.நீங்கல் பொருள்

24 கோவலனை;அரசன் நெறி தவறிக் கொன்றான்.இதில் வந்துள்ள எழுவாய்
1.கோவலன் 2.நெறி 3.கொன்றான் 4.அரசன்

25 நிரோசி சத்துள்ள உணவுகளை உண்டாள்.
நிரோசி உடல் ஆரோக்கியம் வாய்ந்தவளானாள்.
இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
1.எனினும் 2.அதனால் 3.உம் 4.மற்றும்

26 பாவை கண் சிமிட்டினாள் என்பது
1.உவமைத் தொகை 2.பண்புத் தொகை 3.உம்மைத் தொகை 4.அன்மொழித் தொகை

27 உயிர் முன் உயிர் புணர்தலாக அமையும் சொல்
1.அரிசியாலை 2.தீப்பெட்டி 3.மட்குடம் 4.உள்வீடு

28 வேகமாக ஓடினான் என்பது
1.வினைத் தொடர் 2.தனிவினையடை 3.கூட்டு வினையடை 4.பெயர்த் தொடர்

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29 1.தனிவினை :- ஓடு,நில்,பாருங்கள்
2.கூட்டுவினை :- தந்தியடி,காத்திரு,முன்னேறு
3.முற்றுவினை :- படித்தான்,படித்து,சென்றது
4.எச்சவினை :- ஓடி,பாடி,சென்று

30 1.மாற்றுப்பெயர் :- அவள்,அது,நீ
2.தொழிற் பெயர் :- பாடுதல்,எழுதினான்,பொரித்தல்
3.ஆக்கப் பெயர் :- வானொலி,புத்திசாலி,முதலாளி
4.கூட்டுப் பெயர் :- குளியலறை,நூல்நிலையம்,கடற்கரை

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31 இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வரும் போதைவஸ்த்துப் பாவனையை ஒழிப்பதற்கு மக்கள் மத்தியில்............ மேற்கொள்ளப்பட்டுள்ளது.
1.விளம்பரம் 2.விழிப்புணர்வு 3.பிரசுரம் 4.பிரசாரம்

Education NCP - www.edncp.lk

32 நமது நாட்டுக்கைத்தொழில் துறையில்.......... செய்வதற்குப் பல நாடுகள் முன்வந்துள்ளன.

1.முதலீடு 2.அறவீடு 3.பங்கீடு 4.காப்புறுதி

33 நூல் ஆசிரியர் தான் எழுதிய நூலை மறைந்த தன் தாய்க்கு........ செய்தார்.

1.திறனாய்வு 2.சமர்ப்பணம் 3.கழிவிரக்கம் 4.பிராயச்சித்தம்

34 இனப்பிரச்சினைக்கு......... மூலமே சுமூகமான தீர்வைக் காணலாம்.

1.யுத்தம் 2.வாய்மொழி 3.சமாதானம் 4.கூடிக்குலாவி

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

35 நகர் முழுவதும் வெள்ளம் பெருகக் காரணம்.........

1.மழை பெய்தமையாதலால் 2.மழை பெய்ததால்
3.மழை பெய்தமையால் 4.மழை பெய்தமையாகும்

36 கலை விழா நிகழ்வைக் காண மகளிர் கூட்டம்........

1.சென்றார்கள் 2.சென்றது 3.சென்றன 4.சென்றனர்

- கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறாத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே

37 இப்பாடல் கூறவந்த விடயம்

1.தேனின் இனிமை 2.தென்னாட்டின் சிறப்பு 3.மொழி 4.வாழ்வு

38 பாடலில் வந்துள்ள அணி

1.எதுகை 2.மோனை 3.சிலேடை 4.உவமை

39 ஒண்டமிழ் என்பதில் ஒண் எனும் பதம் குறிப்பது

1.ஒளி 2.ஒலி 3.வழி 4.வன்மை

40 கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) இம்மொழி வளர்ச்சிக்குச் சொல்லின் வளர்ச்சி ஓர் சிறந்த அறிகுறியாய் உள்ளது.
(ஆ) மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியைப் பொறுத்தது.
(இ) அகராதி வேலைக்கும் முடிவில்லை.

Education NCP - www.edncp.lk

(ஈ) நமது வாழ்க்கை வளமுறுவதனால் சொற்கள் பெருகிக் கொண்டுதான் செல்லும்.

(உ) ஆகவே தமிழ் மொழி வளர்ச்சிக்கு அகராதிகள் இயற்றுவது இன்றியமையாத செயலாகும்.

1.அ,ஆ,ஈ,இ,உ 2.இ,அ,உ,ஆ,ஈ 3.ஆ,அ,உ,ஈ,இ 4.ஆ,அ,ஈ,இ,உ

(40 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION-NORTH CENTRAL PROVINCE

**ஆண்டிறுதிப் பரீட்சை – 2019**

| தரம் |
|---|
| 10 |

மாணவர் பெயர்/சுட்டெண் :…………………….........................

பாடசாலையின் பெயர் :………………………………………..........  நேரம் : 2மணித்தியாலம்

Education NCP - www.edncp.lk

## தமிழ் மொழியும் இலக்கியமும்

## பகுதி II

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01 சுருக்கமான விடை தருக.

1) ‘‘கணங்களின் பேராற்றில் மின்னி மறைகின்றன பல்லாயிரம் எண்ணக் குவியல்கள்’’. இவ்வடியில் இடம்பெற்ற எழுவாய்,பயனிலை யாது?

2) ‘‘நீங்களியள் குளிச்சத்துக்கு எனக்கேலுமா….’’இந்த பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்கு வாக்கியமாக மாற்றி எழுதுக.

3) பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தற் குறியீடு இட்டு எழுதுக.
என்னடா மச்சான் இப்ப மாபிள் அடிக்கிறதை விட்டுக் கிரிக்கட் அடிக்க துவங்கி விட்டாயாம்

4) ‘‘சூடு’’ எனும் சொல் பெயராகவும்,வினையாகவும் வரும் வகையில் தனித் தனியாக வாக்கியம் எழுதுக.

5) ‘‘சிங்கத்தின் இளையது குஞ்சு’’ இது எவ்வகை வழு எனக் கூறி இதனை வழாநிலையாக எழுதுக.

6) அழைப்பிதழ் எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 02 எழுதுக.

7) மறைந்த யாழ்ப்பாணத்துப் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் தமிழ்ப் பணிகள் நினைவு கூறப்பட்டது.இங்கு இடம்பெற்றுள்ள மயக்கத்தை நீக்கி எழுதுக.

8) பகுபதம்,பகாப்பதம் என்றால் என்ன? உதாரணம் தருக.

9) பின்வரும் வாக்கியங்களை கூட்டு வாக்கியமாக்குக.
(அ)மிகப் பழமையான மரபிலக்கணத்தைக் கொண்டது தமிழ்மொழி.
(ஆ)தமிழ்மொழி கேட்பதற்கு மிகவும் இனிமையானது.

10) விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை எவை?  (20 புள்ளிகள்)

02 பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் எழுதுக.பொருத்தமான தலைப்பும் இடுக.

(அ) நல்ல நண்பர்களைத் தேடி அறிந்து கொள்வது இலகுவான காரியமல்ல.நல்ல நண்பர்களைத் துணையாக்கிக் கொண்டால் எம் சந்தேகங்கள் அனைத்தையும் அவர்களிடம் வெளிப்படுத்தவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் அறியாத பல விடயங்களை அறிந்து கொள்ளவும் முடியும்.ஆகவே நல்ல நூல்களை வாசித்து நல்ல நண்பர்களாக மாறி செயற்படுவோம்.என்ற கருத்துப் புலப்பட கட்டுரை எழுதுக.

(ஆ) அண்மையில் உமது பாடசாலையில் நடை பெற்ற ''ஆசிரியர் தின விழாவிலே''ஆசிரியர்களின் பெருமையையும் அவர்களது சிறப்புக்கள் பற்றியும் நீர் ஆற்றிய சொற்பொழிவு.

(இ) இன்றைய காலகட்டத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.இதற்கான காரணம் சாரதிகளின் கவனயீனம் என்றும் பாதசாரிகளின் கவனயீனமே என்றும் இருவருக்கிடையில் இடம்பெறும் உரையாடல்.

(ஈ) வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு கல்வி அத்தியவசியமானது.அக் கல்வியை தேடுவதற்கு வறுமை ஒரு தடையல்ல.என்ற கருத்துப் புலப்பட சிறுகதை ஒன்று எழுதுக.

(25 புள்ளிகள்)

03 பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

எந்த ஒரு கலையோ இலக்கியமோ உண்மையாகச் செழித்து வளர வேண்டுமாயின்,அது பேரியக்கமொன்றின் அம்சமாக இருத்தல் அவசியம்.நாட்டுப்பாடல் வளர்ச்சியும் இவ்விதிக்கு விலக்கன்று.உழைக்கும் மக்களின் இலக்கியம் நாட்டுப் பாடல்களாம்.பல்வேறு காலமாக சமூகத்திலே நசுக்கப்பட்டு வந்துள்ள அவர்களது ஆவேசமும் உரிமைக் குரலும் நாட்டுப் பாடல்களில் ஆங்காங்கு ஒலிப்பதுண்டு. இன்ப துன்பங்களைச் சித்தரிக்கும் பாடல்களின் அடிநாதமாக அவர்களது கண்ணோட்டம் அமைந்துள்ளது. அது நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டமாகும். அந்தக் கண்ணோட்டத்தை ஆதாரமாகக் கொண்டு எமது காலத்துச் சமூக இயக்கங்களில் நாட்டுப் பாடல் முதலியவற்றைக் கலந்தால் நிச்சயம் அவை புதிய வாழ்வு பெறும்.ஆனால் அவ்வாறு செய்தால் அதன் 'தூய்மை' கெட்டு விடும். எனச் சிலர் பிரலாபிப்பர்.

எனினும்,இன்று இங்கிலாந்து,அமெரிக்கா முதலிய நாடுகளிலே நாட்டுப்பாடல் இயக்கம் மிகவும் செழித்து வளரக் காண்கிறோம். முன்னெப்பொழுதும் இல்லாத அளவு பாடல்கள் இயற்றப் படுகின்றன.'கச்சேரி'களிலும் அரங்குகளிலும் கலைஞர்கள் புதிய புதிய நாட்டுப் பாடல்களைப் பாடி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசத்திலாழ்த்தி வருகின்றனர்.அதன் இரகசியம் என்ன? வேறொன்றுமில்லை, அணுஆயுத எதிர்ப்பு, சமாதானக் கோரிக்கை,அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு,பலவிதமான உரிமைப் போராட்டம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞரும், பிறரும் தமக்குப் பொழுது போக்காகவும்,தமது கருத்துக்களைப் பிறருக்கு

Education NCP - www.edncp.lk

எடுத்துரைக்கும் முகமாகவும் நாடோடிப் பாடல் மெட்டுகளில் புதிய உள்ளடக்கத்தைப் பெய்கின்றனர்.அதிலே ஆத்ம திருப்தி அடைகின்றனர்.

பழைய மெட்டுக்கள் ஏற்கனவே மக்கள் நெஞ்சில் நிலைத்திருப்பனவாகையால்,விரைவில் புதிய பாடல்கள் யாவராலும் பாடப்படுகின்றன.பழைய சாடியில் புதிய மது வார்க்கப்படுகின்றது.இரண்டும் சிறப்புப் பெறுகின்றன. இதிலொன்றும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

(10 புள்ளிகள்)

04 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இளைஞர் உடலோம்பல் மீது பெருங்கவனம் செலுத்த வேண்டும்.இவ்வுலக இன்பத்தை நுகர்தற் பொருட்டு கடவுளால் அளிக்கப்பட்ட உடைமையே இவ்வுடலாகும்.இவ்வுடைமையை இளமையிலேயே வளப்பத்திக் கொள்ள வேண்டும்.உடலை இளமையிலேயே பேணாது விடுவோமாயின் இவ்வுலக வாழ்வை இழந்து துன்புற நேரும்.உடல் வளம் பெறாத ஒருவன் எச்செல்வம் பெற்றிருந்தால் என்ன?

உடல் ஆரோக்கியம் அற்றவர்களிடம் அழகு குடி கொள்ளமாட்டாது.அழகு என்பது யாது? அழகு என்பது நிறத்தில் மூக்குக் கண்ணாடியில்,பட்டுடையில் பிற அணிகளில் அமைந்திருப்பதன்று.மூளை,இதயம்,நுரையீரல் போன்ற பேருறுப்புக்கள் ஒன்றாக செயற்படுவதால் அரும்புவதே அழகாகும். உடலை ஓம்பவும்,அழகுறச் செய்யவும் உடற்பயிற்சிகள் அவசியமாகும்.எல்லோரும் கொள்ளத்தக்கதும் எளியதுமாய் இருப்பது நடைப்பயிற்சியாகும்.நடத்தலால் உடற்பயிற்சியும்,காற்றிடை மூழ்கலும்,ஞாயிற்றொளியில் தோய்தலும் நிகழ்கின்றன. உடற்சுகத்திற்கு உணவு முறைகளும் அவசியமாகும்.முதலாவதாக வேளை நேரமின்றிச் சாப்பிடுவதை நிறுத்தல் நல்லது.பசித்தோற்றம் இல்லாத போது எக்காரணி பற்றியும் உணவு கொள்ளல் ஆகாது.மீதூண் கொள்வதும் ஆபத்தாகும். இது நோய்க்கும் அகால மரணத்திற்கும் அடிகோலும்.

(அ) இப்பந்தியில் உடைமையாகக் கொள்ளப்படுவது யாது?

(ஆ) அழகு என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம் யாது?

(இ) நடைப் பயிற்சியாய் கொள்ளத்தக்கது எது?

(ஈ) உணவு உட்கொள்ளத்தகாத வேளைகள் யாவை?

(உ) பொருள் தருக.

1.ஓம்புதல் -

2.அரும்புதல் -

(10 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

05 உமது கிராமத்திலிருந்து பிரதான நகருக்குச் செல்லும் பாதையானது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.இதனால் உரிய நேரத்திற்குப் பாடசாலை செல்ல முடியாத நிலை உள்ளது.இப்பாதையைச் சீர்செய்து தருமாறு கோரி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

அல்லது

06 புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கணனி கல்வி நிறுவனம் ஒன்றிற்கான விளம்பரம் ஒன்றினை 100 சொற்களில் எழுதுக.

(15 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION –NORTH CENTRAL PROVINCE

**ஆண்டிறுதிப் பரீட்சை – 2019**

| தரம் |
|---|
| 10 |

மாணவர் பெயர்/சுட்டெண்:……………………………………………

பாடசாலையின் பெயர்:……………………………………………….. நேரம்: 2மணித்தியாலம்

Education NCP - www.edncp.lk

## தமிழ் மொழியும் இலக்கியமும்

## பகுதி III

- கவனிக்க: அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

01 சுருக்கமான விடை தருக.

1.‘‘முழங்குதிரைப் புனலருவி கழங்கெழுத் தாடும் முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்’’

(அ) சிற்றில் என்பது யாது?
(ஆ) இவ்வரிகள் இடம்பெறும் இலக்கிய நூலின் ஆசிரியர் யார்?

2.‘‘என்னக் கேட்டு,அவ்விரக்கம் இலாளையும் தன் நல் கையின் வணங்கினன் தாய் என.’’

(அ) இங்கு தாய் என சுட்டப்படுபவர் யார்?
(ஆ) யார்?யாரை வணங்கியதாகக் கூறப்படுகிறது?

3.‘‘பறகு பறகென்று சொறியப்,பதமாயிருந்த பாக்கு வெட்டி இறகு முளைத்துப் பறந்ததுவோ?எடுத்தீராயிற் கொடுப்பீரே!’’

(அ) பாக்கு வெட்டியைப் பறிகொடுத்தவர் யார்?
(ஆ) பாடலில் வந்துள்ள அணியை இனங்கண்டு எழுதுக?

4.‘‘…..சாதகங்கள் புரட்டுவர் பொய்மைசேர் மதியினிற் புலை நாத்திகங் கூறுவர்…’’

(அ) தமக்குச் சாதகமாக அமையும் விடயங்களை அடுக்கடுக்காகக் கூறுபவரை எவ்வாறு அழைப்பர்?
(ஆ) நாத்திகன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

5.‘‘இந்தக் காசம்-நாவலர் அவர்கள்,ஆவேசங் கொண்டு எழுந்த அந்த சந்தர்ப்பத்தில்‘வருகிறேன்’,‘போகிறேன்’ என்று சொல்லாமலே பறந்து விட்டது.

(அ) ‘வருகிறேன்’,‘போகிறேன்’என்று சொல்லாமல் பறந்தது எது?
(ஆ) இவ்வரிகள் இடம்பெறும் கட்டுரை யாது?

6.‘‘........வண் கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப் பொழியும்
படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.’’

(அ) இங்கு கவி பாடப் புறப்பட்டவர் யார்?
(ஆ) வண் கவிதை என்றால் என்ன?

7.‘‘ஓதிப் படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும் ஏழைக்கு செய் தீங்கை-அல்லா எள்ளளவும் ஏற்கமாட்டான்.’’

(அ) இவ்வரிகள் வெளிப்படுத்தும் விழுமியப் பண்பு யாது?
(ஆ) இதில் மறைமுகமாக உணர்த்தப்படும் கருத்து யாது?

8.‘‘கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே மிக்காரைச் சேர்தல் மிகமாண முன் இனிதே...’

(அ) இங்கு இனியவையாகக் கூறப்படுபவை எவை?
(ஆ) மிக்கார் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

9.‘‘ஆழ்கடலா? கரை ஓரத்திலா?’’ என்றாள் தூண்டிலிலே இத்தனை விடயங்கள் இருக்கா? என்று நான் தியானத்தில் இருந்த போது மிகவும் முக்கியமான ஒரு கேள்விக் கணையை வீசினாள்.

(அ) இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
(ஆ) கேள்விக்கணை என்பதால் கருதப்படுவது யாது?

10.‘‘ஆற்றோடு ஆற்று நீர் அலைந்து வருமாப்போல் அதன் பிறகே புள்ளுந் தொடர்ந்து வருமாப்போல்.’’

(அ) இதில் எடுத்துக் காட்டப்படும் அணியைத் தருக?
(ஆ) புள் என்பதனால் குறிக்கப்படுவது யாது?

(2x10=20 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

02 பின்வரும் செய்யுட் பகுதிகளையும்,உரைநடைப் பகுதிகளையும் வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அறந்தானே யென்கின்ற வயனின்றா
டனை நோக்கி,யைய வன்பி
னிறைந்தாளை யுரையென்ன,நெறி திறம்பாத்
தன் மெய்யை நிற்ப தாங்கி,

இறந்தான் றனிளந்தேவி,யாவர்க்குந்
தொழுகுலமா மிராமன் பின்பு

பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
றனைப் பயந்த பெரியாளென்றான்.

(அ) அன்பில் நிறைந்தவளாகக் குறிக்கப்படுபவள் யார்?
(ஆ) அன்பில் நிறைந்தவள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறாள்?

2. அடக்கம் முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா-மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

(அ) இப்பாடலில் உள்ள நீதிக் கருத்துக்களைத் தருக?
(ஆ) பாடலில் வந்துள்ள அணியை இனங்கண்டு விளக்குக?

3. பட்டி பெருகவேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேணும் தம்பிரானே
மேழி பெருகவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே
நல்ல மழை பெய்யவேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே.

(அ) இப்பாடல் மூலம் எடுத்துக்காட்டப்படும் உண்மை யாது?
(ஆ) பின்வரும் சொற்களின் பொருள் தருக.
1.பட்டி -
2.மேழி -
3.தழைக்க -
4.நாடு -

4.அப்போது நண்பர் எனக்கு இரண்டு புத்திமதிகள் சொன்னார்.தலைபோகிற காரியம் என்றாலும் ஒவ்வொரு ஐந்து நிமிடமும் டைப் செய்வதை சேமித்து வைக்க வேண்டும். எங்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு டைரக்டரி உண்டாக்கி அதிலே எங்கள் வேலைகளை சேமித்துக் கொள்ள வேண்டும் என்றார். இதை எப்படிச் செய்ய வேண்டுமென்பதையும் விபரமாக விளக்கினார்.

(அ) நண்பர் கூறிய புத்திமதிகள் எவை?

Education NCP - www.edncp.lk

(ஆ) டைரக்டரி என்ற சொல்லின் தமிழ் வடிவம் யாது?

5.இந்த சினிமா மொழிக்கும் இலக்கணம்,மரபு எல்லாமே உண்டு. இது வெகு காலமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. தொழில் நுணுக்க வளர்ச்சியின் விளைவாகப் புதுப்புது சாதனங்கள் அந்த சினிமா மொழியை வளப்படுத்திய வண்ணமிருக்கின்றன. மேனாடுகளில் ஹிட்சாக்,உடிஆலன் போன்றோரின் படைப்புக்களையும் நம் நாட்டில் அடூர் கோபாலகிருஷ்ணன்,அரவிந்தன்,மணிகௌல் போன்றோரின் படைப்புகளையும் காணும் போது இதை உணரலாம்.

(அ) சினிமா மொழியை வளப்படுத்தும் காரணி யாது?
(ஆ) சினிமா மொழியில் அடங்கியிருப்பவை யாவை?

(4+5=20 புள்ளிகள்)

03 எது நல்ல சினிமா? என்ற கட்டுரையில்,

(அ) நல்லதொரு சினிமாவில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் யாவை?
(ஆ) கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றி ஆராய்க.

(8+7=15 புள்ளிகள்)

அல்லது

'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரையில்,
(அ) தோற்றுப் போகும் நிலையில் இராமநாதன் கட்சி இருந்த நிலையில் நாவலர் வீறுகொண்டு எழுந்த விதம் எவ்வாறு விபரிக்கப்படுகிறது?
(ஆ) கூட்டத்தினை அவதானித்த நாவலரின் தோற்றம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

(9+6=15 புள்ளிகள்)

04 திருக்குற்றாலக் குறவஞ்சியில்,

(அ) திருக்குற்றால நாட்டுவளச் சிறப்பு,
(ஆ) பாடல்களில் கையாளப்பட்டுள்ள அணிகள் என்பவற்றை விளக்குக.

(8+7=15 புள்ளிகள்)

அல்லது

குகப்படலத்தில்,

(அ) கம்பர் காட்டும் குகனின் குணாம்சங்கள்,
(ஆ) கைகேயின் குணநிலைகள் என்பன விளக்கப்படுமாற்றினை ஆராய்க.

(9+6=15 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

- 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

05 (அ) உப்பில்லாக் கஞ்சியினை.... எனத் தொடங்கும் பாடலில் இடம்பெறும் நீதிக் கருத்துக்கள் யாவை?
(ஆ) எவ்வாறானவர்கள் வாழ்வார்கள் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?
(5+5=10 புள்ளிகள்)

06 பாரதியார் சுயசரிதையில்,

(அ) பாரதியார் தனது காதலியின் வருகைக்காக காத்திருக்குமாற்றினை விளக்குக.
(ஆ) தாம் விரும்பியவற்றை அடையாமல் போவதற்கான காரணங்கள் எவை?

(5+5=10 புள்ளிகள்)

07 கம்பியூட்டர் என்ற சிறுகதையில்,

(அ) கணிப்பொறி பற்றிய கதாசிரியரின் கருத்து யாது?
(ஆ) இச் சிறுகதையில் இடம்பெற்ற உவமைத் தொடர்களைத் தருக?
(5+5=10 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 10

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

பாடசாலையின் பெயர் : ..........

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........

நேரம் : மணித்தியாலம்

## தமிழ் மொழியும் இலக்கியமும் விடைகள்

### பகுதி 1

### பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 1- 3 | 11- 3 | 21- 4 | 31- 3 |
| 2- 1 | 12- 1 | 22- 4 | 32- 2 |
| 3- 4 | 13- 4 | 23- 3 | 33- 4 |
| 4- 1 | 14- 1 | 24- 1 | 34- 3 |
| 5- 3 | 15- 3 | 25- 2 | 35- 1 |
| 6- 3 | 16- 4 | 26- 2 | 36- 2 |
| 7- 2 | 17- 2 | 27- 3 | 37- 4 |
| 8- 1 | 18- 2 | 28- 4 | 38- 1 |
| 9- 4 | 19- 1 | 29- 4 | 39- 4 |
| 10- 2 | 20- 3 | 30- 1 | 40- 4 |

## பகுதி II

**01.** (1) தேன் + அருவி + திரை + எழுப்பி + வானின் + வழி + ஒழுகும்

(2) கிழக்குப் பிரதேசம் , சிறுகேணி

(3) "எனக்கு வீட்டிலை வேலை கிடக்குது மச்சாள்" என்று அழாக் குறையாகச் சொல்லிவிட்டு எடுத்தேன் ஓட்டம்

(4) பெயர் - கிரீடம் ( பொருத்தமானது)

(5) இறந்தவரின் ஈமக்கிரியைகள் நல்ல முறை இடம் பெற்றன.

(6) கவனித்துக் கேட்டல்

(7) எழுவாய் - கோழிக் குலம்

பயனிலை - கூவினவே

(8) மான் விமலனால் கொல்லப்பட்டது

விமலனால் மான் கொல்லப்பட்டது

(9) முகவரி

உள்முகவரி

விளிப்பு

தலைப்பு (விடயத் தலைப்பு)

உடல் / செய்தி

முடிப்பு

ஒப்பம்

(10) உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி விழாவிற்கு வருகை தந்தார்

02. கட்டுரை

1. தலைப்பு – 02
2. பொருளமையும் அளவும் - 12
3. கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் - 6
4. எழுத்து நுட்பங்கள் - 5

( 25 புள்ளிகள்)

03. சுருக்கம்

மனிதர்கள் மூன்று வகையினராகக் காணப்படுகின்றனர். சுயநலம் கொண்ட உலகின் நன்மை , தீமையை அறியாது தனது இன்ப வாழ்வைக் கருத்திற் கொண்டு வாழ்பவன், கடைத்தரமானவன். இவனை விட கேவலமானவன் துறவிகள் உலகின் கேட்டிலிருந்து விலகி அமைதியாக வாழ்கின்றனர். அவர்களையும் விட மேலானவர்கள் சீர்த்திருத்தக் காரர்கள்.

அவர்கள் சமூகத்தின் தீமைகளை அறிந்து அவற்றை விலக்க வேண்டிய கடமையைச் செய்கின்றான். அவனுடன் பலர் இணைந்து பொது நலத்துடன் செயற்படுவதால் அவர்களைச் சிறப்பித்தல் கடமை.

(10 புள்ளிகள்)

04. (1) புறுநானூறு , புறப் பொருள் வெண்பா மாலை

(2) எல்லோர் மீதும் அம்பெய்யாது தமக்குச் சமமான வீரர்களுடன் போர் புரிவது யுத்த தர்மமாகக் கருதப்பட்டது.

(3) போர்களத்தில் உடல் எங்கும் எள்ளிருக்க இடமின்றி புண்பட்டு இறப்பது வீரனுக்குரிய இலக்கணம்

(4) மானத்திற்கு முதன்மை கொடுத்தனர்

(5) மாற்றார் தம்மை மதிக்கவில்லை என்ற மானம் குறித்தே போர் தொடத்தனர்.

(10 புள்ளிகள்)

## பகுதி III

**01.** (1) (அ) திரிகடுகம்
(ஆ) ஆசிரியர் / ஓதுவிப்பார்

(2) (அ) உடலை உறுதி செய்யும் ஒரு வகை மூலிகை
(ஆ) திரிகூட ராசப்பக் கவிராயர்

(3) (அ) அரிவிவெட்டல் / வேளாண்மை
(ஆ) கண்ணால் ஏற்படும் தீங்கு / பிறரது கண்ணால் ஏற்படும் தீங்கு

(4) (அ) உவமை அணி
(ஆ) அறவிந்தன்

(5) (அ) மனங்கொண்டது மாளிகை / மனநிறைவே உயர்ந்தது
(ஆ) செல்வம் என்பது சிந்தையின் நிறைவு

(6) (அ) ஆறுமுக நாவலர்
(ஆ) விஸ்வநாதன் பிள்ளை / வாதிகள்

(7) (அ) ஐம்புலன்கள் , கரணம், ஆவி போன்றன ஒன்று சேர்ந்த விருப்பத்துடன் நாடுதல்
(ஆ) சுவை, ஒளி , ஊறு, ஓசை, நாற்றம்

(8) (அ) குறப் பெண்
(ஆ) நாயக்கர் காலப் பகுதியில்

(9) (அ) விண்ணுலக சுவர்க்கம்
(ஆ) குலோத்துங்க சோழன்

(10) (அ) இருதுபர்ணன்
(ஆ) ஒரே பார்வையில் எண்ணும் கலை

( 20 புள்ளிகள்)

**02.** (1) (அ) நித்தியம் , நைமித்தியம் , காமியம்
(ஆ) வேர், மரம் , பயன்

(2) (அ) ஆற்றோடு ஆற்று நீர் அலைந்து வருதல்
ஆற்று நீரோடு புள்ளுத் தொடர்ந்து வருதல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருதல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருதல்

(ஆ) கண்ணூறு

(3) (அ) பூதந்சேத்தனார், சங்கமருவிய காலப்பகுதி

(ஆ) கற்றவர்களுக்கு முன் தாம் கற்ற கல்வியைச் சொல்லுதல்
அறிவர் சிறந்தவரை சேர்தல்
தாம் பிறரிடம் எவ்வளவும் இரக்காமல் கொடுத்து வாழ்தல்

(4) (அ) புயல் காற்று

(ஆ) புயல் காற்றுக்குப் பிறகு ஏற்பட்ட அமைதி நிலை பேச்சு , மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பிய பறிந்றோ கட்சியினர் மெல்ல கீழே இறங்கித் தரை மட்டத்திற்கு வந்து விட்டார்கள்.

(5) (அ) பிரின்டர் - அச்சியந்திரம் / அச்சுப்பொறி

பைல் - கோப்பு /கோவை

(ஆ) உவமை அணி

நல்ல பாம்பை உசுப்பி விடுவது போல ஸ் ஸ் என்று அது உயிர்த்தத.

உவமானம் - நல்ல பாம்பை உசுப்பி விடுவது

உவமேயம் - பிரின்டரின் இயக்கம்

பொதுத் தன்மை - சத்தம்

( 20 புள்ளிகள்)

03. (அ) பாரதியார் சுயசரிதைப் பகுதியில்

1 , 2 ம் பாடல்களில் விளக்கம்

(ஆ) 3ம் பாடலில் பார்க்கவும்

(9+6=15)

**அல்லது**

(அ) திருக்குற்றாலக் குறவஞ்சி பகுதியில் 1,2ம் பாடல்களைப் பாரக்கவும்

(ஆ) உயர்வு நவிற்சி அணிகள்

1. தேனருவி திரை யெழுப்பி வானின் வழி ஒழுகும்
2. கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
3. தேனலர் சண்பக வாசம் வானுலகில் வெடிக்கும்
4. மந்தி சிந்தும் கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்
   போன்ற ஏதாவது மூன்று அணிகள் விளக்கப்படல்.

(7+8=15)

04. (அ) நல்லூர் கந்த சுவாமி கோயிலார்க்கும் பிராமணர்க்கும் இடையில் நடந்த வழக்கொன்றின் போது கோயிலாரை ஆதரித்து வாழக் கூடிய பிறிற்றோ அவர்கள் பிரமாணரை ஆதரித்து நின்ற நாவலருக்கு எழுதிய தந்தி, தபால்களில் தமக்குச் சார்பாக நாவலர் இருப்பாரானால் பிராமணருக்கு வெற்றி கிட்டுமாறு தாம் வழங்கை நடத்தி முடிப்பதாக எழுதி, தமது நம்பிக்கைத் துரோகத்தை வெளிப்படுத்தி இருந்தார். இதனைச்ச ாதகமாக்கியே இந்த நேர்மையற்றவரை விலக்கி இராமநாதனைச் சட்ட நிருபண சபைக்கு அனுப்பி வைக்க நாவலர் பாடுபட்டார்.

(ஆ) பிறிற்றோ-

பிரசித்தி பெற்ற பழுத்த வழக்கறிஞர் , அக்காலச் சட்ட நிபுணர்களே தலை சிறந்தவர் இலங்கையிலுள்ள எல்லாரும் அவரை அறிவர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்குப் பெரிய பேர் பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். யாழ்ப்பாணத்தில் அளவு கடந்த செல்வாக்கு

(8+7=15)

**அல்லது**

(அ) அவர் ஆறாயிரம் வார்த்தைகளுக்கிடையில் 36 பக்கங்களில் எழுதிய நெடுங்கதையை சேமித்து வைத்த பைலை ஒழித்து விட்டு அதனை இல்லை என்று சொல்லியது

(ஆ) புதிதாக பிறந்த குழந்தை வீட்டை மாற்றியது போல மாற்றம்

மூன்று பகுதிகளாகப் பிரித்து மூவரும் வேலைகளைச் செய்தல்

வீடு ஒரு விஞ்ஞானத் துள்ளலில் அமைதல்

கணனிப் பாஷையில் கதைகள் இடம் பெறல்

கதாசிரியர் சிறுகதை எழுதுதல்

**போன்றவற்றின் விளக்கத்தைப் பொருத்தமாக எழுதுதல்**

(6+9=15)

05. (அ) நாய் போன்ற நன்றிக் குணமுடையவர்களின் நட்பை தழுவிக் கொள்ளல்

யானை போன்ற பழி தீர்க்கும் குணமுடையவர்களின் நட்பை விளக்கிக் கொள்ளல்

(ஆ) உவமானம் - நாய்

உவமேயம் - நன்றிக் குணமுடையவர்

பொதுத் தன்மை - நன்றிக் குணம்

---

உவமானம் - யானை

உவமேயம் - பழித் தீர்க்கும் குணமுடையவர்

பொதுத் தன்மை - பழித்தீர்க்கும் குணம்

(5+5=10)

06. (அ) பலாக் கனிகள், சேறு நிறைந்த வயல் நிலம் , சங்குகள் நிறைந்திருத்தல், இளநீர் காய்கள் காணப்படல்

(ஆ) வெங்கட் பிறை – வெம்மை நிறைந்த பிறைச் சந்திரன்

கரும்பிறை - கரும்பு வில்லேந்திய மன்மதன்
அப்பிறை – கண்ணீர் சிந்தும்

(5+5=10)

07. (அ) கடலின் ஓசை எழுப்பும் பயம்
காற்றின் வேகம் ஏற்படுத்தும் தாக்கம்
நிலவு காட்டும் மயக்கம்

(ஆ) உருவக அணிகளைப் பயன்படுத்தி வர்ணிக்கும் விதத்தை எழுதியிருத்தல்

(5+5=10)

අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**
**Learn Ordinary Level**

LOL.lk online Book Store

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371
















































# LOL.lk
online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්










## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්










## කෙටි සටහන් පොත්










මිටිටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS WIKI

# ප්‍රශ්නපත්‍ර පොත්
# ගෙදරටම ගෙන්ව ගන්න
# ඔන්ලයින් ඔඩර් කරන්න
# WWW.LOL.LK
# වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal
NO PAYPAL ACCOUNT NEEDED!

# ONLINE BOOK STORE



An evening of fun for young readers